(See Rule 42 of CRPC)

DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC. NO.666/2019

**Depostitions of PW- 2 Witness for**

| Name | திருமதி. சீதாலட்சுமி | Caste | |
|---|---|---|---|
| Husband name | பாலையா | Calling | கூலி வேலை |
| Village | மம்சாபுரம் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age. | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August-2024

Signature of Witness.

19.08.2024

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை–

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாலையா எனது கணவர் ஆவார். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் மாலை 06.00 மணியளவில் ஞாயிற்றுகிழமை அன்று எங்கள் வீட்டில் மருமகனுக்கும், மகளுக்கும் சண்டை நடந்தது. நாங்கள் ஏன் சண்டை போடுகிறீர்கள் என்று சத்தம்போட்டோம். எதிர் வீட்டைச்சேர்ந்த குருவம்மாள், ரவி, பால்ராஜ் ஆகியோர்கள் வந்து சின்னப்பையன் தூங்கமாட்டேன் என்கிறான் என்று சொல்லி சத்தம்போடக்கூடாது என திட்டினார்கள்.

2. நாங்கள் வீட்டிற்குள் தான் சண்டை போடுகிறோம். உங்களுக்கு என்ன என்று கேட்டதற்கு கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். எனது தலைமுடி மற்றும் எனது மகள் இராமலட்சுமியின் தலைமுடியையும் பிடித்து இழுத்தார்கள்.

குருவு என்னை அசிங்கமாக பேசினார். அப்போது எனது கணவர் வந்து ஏன் அசிங்கமாக திட்டுகிறீர்கள் என்று கேட்டார். ரவி எனது கணவரின் வலது கையை ஒடித்துவிட்டார். புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றபோது மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தியதால் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் எனது கணவரை சிகிச்சையில் சேர்த்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள அறிவேன் சாட்சி கைரேகை என்னுடையதுதான். (**புகாரில் உள்ள அறிவேன் சாட்சி கைரேகை மட்டும் அ.சா. ஆ. 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**. ) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனத் தெரிவித்தார்.